செய்தி வெளியீடு எண். 158 நாள்: 24.03.2020

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 144-ன் கீழ், ஊரடங்கு உத்தரவு அமல்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 144-ன் கீழ், ஊரடங்கு உத்தரவு அமல்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (24.03.2020) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது :

கொரோனா நோய் தடுப்பு பணிகள் தினந்தோறும் கண்காணிக்கப்பட்டு வரும் நிலையில், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 6 முறை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அலுவலர்களுடன் கூட்டங்கள் நடத்தி, உரிய அறிவுரைகளை வழங்கி உத்தரவுகள் பிறப்பித்துள்ளார்கள். இதனைத் தொடர்ந்து தலைமைச் செயலாளர் தலைமையில் Task Force அமைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர்களுடன் 3 முறை காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, போதிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு சுகாதாரத்துறை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக கூட்டங்கள் நடத்தி, தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வரை திருவள்ளூர் மாவட்டத்தில் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள 229 நபர்கள் கண்காணிக்கப்பட்டு வந்த நிலையில், 57 நபர்களை அவர்களின் இருப்பிடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, 157 நபர்கள் தொடர் கண்காணிப்பில் உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 144-ன் கீழ், ஊரடங்கு உத்தரவு 22.03.2020 அன்று கடைபிடிக்கப்பட்டது போல், இன்று 24.03.2020 மாலை 6.00 மணிமுதல் 01.04.2020 வரை அரசின் ஊரடங்கு உத்தரவு அமலுக்கு வரவுள்ளது. மாவட்டத்தின் அனைத்து எல்லைகளும் மூடப்படவுள்ளது. இரயில்கள், தனியார் பேருந்துகள், ஆட்டோக்கள் ஆகியவை இயங்காது.

கொரோனா வைரஸ் தொடர்பான தவறான தகவல்களை பரப்பும் செயல்களில் ஈடுபடுவர்கள் மீது பொது சுகாதாரச் சட்டம் 1939-ன் விதி 41, 43, 44-ன் படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊரடங்கு உத்தரவு அமலுக்கு வரவுள்ள நிலையில், அத்தியாவசிய தேவைகளான பால், மருந்தகங்கள், மருத்துவமனைகள், பெட்ரோல் பங்க்குகள், வங்கி ஏ.டி.எம்., மளிகைக் கடைகள், காய்கறிக் கடைகள் மற்றும் இறைச்சி கடைகள் உள்ளிட்டவைகள் இயங்குவதற்கு எவ்வித தடைகளும் இல்லை. மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகள், கூட்டுறவு

அங்காடிகள் மற்றும் அம்மா உணவகங்கள் செயல்படும். ஆதரவற்ற முதியோர்கள் உணவருந்தும் வகையில், அவர்களுக்கு தேவையான உணவினை, அவர்கள் வசிக்கும் இடங்களில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாவட்டத்தில் செயல்படும் அனைத்து திரையரங்குகள், கேளிக்கை விடுதிகள், பொழுதுபோக்கு பூங்காக்கள், நீச்சல் குளங்கள், உடற்பயிற்சி மையங்கள், மக்கள் அதிகம் கூடும் வணிக வளாகங்கள், கோடைக்கால பயிற்சி வகுப்புகள், மாநாடுகள், கருத்தரங்குகள், ஊர்வலங்கள், கலாச்சார நிகழ்வுகள், விளையாட்டு போட்டிகள் போன்ற நிகழ்வுகளுக்கு 31.03.2020 அன்று வரை அனுமதி வழங்கக் கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் தவிர, வேறு எந்த ஒரு நிகழ்ச்சியும் திருமண மண்டபத்தில் நடத்தக் கூடாது. அவ்வாறு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகளில் கூட குறைந்த அளவில் பங்கேற்க வேண்டும். புதிய நிகழ்ச்சிகள் எதுவும் 31.03.2020 வரை நடைபெறுவதை திருமண மண்டபத்தின் உரிமையாளர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் உத்தரவு வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதே போன்று, திருவிழாக்கள், துக்க நிகழ்வுகள் உள்ளிட்ட அனைத்து சமூக நிகழ்வுகளில் மக்கள் குறைந்த அளவில் கூடினால் கொரோனா வைரஸ் பரவுவதை பெரிய அளவில் தடுக்க முடியும்.

மாவட்ட வழங்கல் அலுவலர் மூலம், மக்களின் அத்தியாவசிய பொருட்களை அதிக விலையில் விற்பனை செய்பவர்களையும், பொருட்களை பதுக்குபவர்களையும் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் அதிகம் கூடுவதை தடுப்பதற்கும், மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு பாதுகாப்பு பணியில் அதிகமான போலீஸ் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மக்கள் முன்னெச்சரிக்கையுடன் கடைபிடிக்க வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகளாக கொரோனா தொற்றை வரும் முன் தடுக்க பொதுமக்கள் கை, கால்களை சோப்பு போட்டு, குறைந்தபட்சம் 30 விநாடிகள் நன்றாகக் கழுவ வேண்டும். சமீபத்தில் வெளிநாட்டிலிருந்து திரும்பியவர்களின் விவரத்தை அக்குடும்பத்தினர் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திடம் தொலைபேசி எண். 104 / 1077 மூலமாக தெரிவிக்க வேண்டும். மாவட்ட நிர்வாகம் உங்களை தொடர்புகொள்ளும்வரை, வீட்டிலேயே தனித்து இருக்க வேண்டும்.

சளி, இருமல், காய்ச்சல், மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் இருந்தால், உடனடியாக அரசு மருத்துவரிடம் சென்று உடல் பரிசோதனை செய்தல் வேண்டும். நோய்த்தொற்று கண்டறியப்பட்டால், தவறாமல் மருத்துவரின் ஆலோசனைப்படி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். சுயமாக சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டாம். 144 தடை உத்தரவு அமலில் இருப்பதால், ஒரே இடத்தில் 4 நபர்களுக்கு மேல் கூட்டமாக இருக்கக் கூடாது. அவரவர் வீட்டிலேயே நீங்கள் இருக்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களுக்காக வெளியே வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், இரு நபர்களுக்குமிடையே குறைந்தபட்சம் 3 அடி இடைவெளி இருக்க வேண்டும்.

இருமல், தும்மல் வந்தால் ஒரு கைக்குட்டையாலோ, துணியாலோ மற்றவர்களுக்கு நோய் பரவ இடம் கொடுக்காமல் முகத்தை மூடிக்கொள்ள வேண்டும். மிகவும் அத்தியாவசிய தேவைகள் தவிர வேறு எதற்கும் நீங்கள் வெளியே வர வேண்டாம். பதற்றமோ, பீதியோ அடைய வேண்டாம். வீண் வதந்திகளை நம்ப வேண்டாம். மாவட்ட நிர்வாகம் பொதுமக்களின் நலன் கருதி எடுத்து வருகிறது. எனவே, இதனைத் உணர்ந்து பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இவ்வாலோசனைக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வெ.முத்துசாமி, திட்ட இயக்குநர்கள் திருமதி.க.லோகநாயகி (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை), திரு.வை.ஜெயக்குமார் (தமிழ்நாடு மாநில ஊரகம் (ம) நகர்ப்புறம் வாழ்வாதாரம் இயக்கம்), இணை இயக்குநர் (மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள்) மரு.இளங்கோவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜவஹர்லால் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**